# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திரு. க. மகேந்திரன்

ந.க. எண். 257 / 2017 / அ3 நாள் : 28.06.2019

பொருள் : மனைப்பிரிவு – குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி – குத்தாலம் கிராமம் நில அளவை எண்கள். 476/1C1 மற்றும் 482/2A ல் 154172.77 ச.அடி பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை (நிலை) எண். 134 / நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை / நாள் 20.09.2002.

2) அரசாணை (நிலை) எண். 138 / வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை / நாள் 04.06.2004.

3) அரசாணை (நிலை) எண். 244 / நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நக.1) துறை / நாள் 05.12.2008

4) திரு. கோ. வைத்திலிங்கம், 4/39. ஜெயராஜ் நகர், மங்கநல்லூர் குத்தாலம் வட்டம் மற்றும் திரு. பிரதாப்சிங் நடராஜ், 1/242. காந்திஜி தெரு, சீனிவாசபுரம், மயிலாடுதுறை வட்டம் என்பவர்களின் விண்ணப்பம் நாள் 28.07.2017

5) தஞ்சாவூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம் தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் 1241/2017/தஞ.2/ நாள் : 16.04.2018, 08.02.2019 மற்றும் 15.02.2019.

6) தானப்பத்திரம் ஆவண எண். 15 நாள் : 04.01.2019

7) இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 109 நாள் : 26.10.2018

8) மற்றும் இதர தொடர்பான ஆவணங்கள்.

*****

**உத்தரவு:**

குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி, குத்தாலம் கிராமம் நில அளவை எண்கள். 476/1C1 மற்றும் 482/2A-ல் 154172.77 ச.அடி பரப்பளவில் அமையும் மனை பிரிவுகள் செய்வதற்கு அதன் உரிமையாளர்கள் திரு. K. வைத்திலிங்கம் மற்றும் திரு. P. பிரதாப்சிங் நடராஜ் என்பவரின் விண்ணப்பத்தினை பரிசீலித்து, நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்களால் ம.வ./ந.ஊ.து.இ (தஞ) எண்.01/2019 என்ற உத்தரவின்படி, மேற்படி மனைப்பிரிவில் 68 வீட்டு மனைகள் மற்றும் 1 கடை அமைத்துக் கொள்ள தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பேரூராட்சி மன்றம் தனது தீர்மான எண். 109 நாள் 26.10.2018ன்படி மனைப் பிரிவினை முறைப்படுத்தி தீர்மானம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து கீழ்கண்ட விபரப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்டு உத்தரவு அளிக்கப்படுகிறது.

## விபரம்

| | | |
|---|---|---|
| 1) மனைப்பிரிவு புல எண். | : | 476/1C1 மற்றும் 482/2A |
| 2) மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 154172.77 ச.அடி 14323 m² |
| 3) சாலைகள் மற்றும் மூலை முடுக்கு | : | 33551 ச.அடி 3116.96 m² |
| 4) மனைகள் | : | 68 மனைகள் |
| 5) பூங்கா | : | 12203 சதுர அடி 1133.68 m² |
| 6) கடை பயன்பாடு | : | 2119 ச.அடி |
| 7) மனுதாரர் பயன்பாடு | : | வரைபடத்தில் அளவீடப்பட்டுள்ளது |
| 8) கூடுதல் | : | 154172.77 ச.அடி |

## நிபந்தனைகள்

1. அரசு நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரத்தில் மனை 1–க்கு ரூ.1050/– வீதம் மனை வளர்ச்சி கட்டம் இப்பேரூராட்சியின் பலவகை இரசீது எண். 256 நாள் 27.06.2019ன்படி செலுத்தப்பட்டுள்ளது மற்றும் நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ. 18,700/– அரசு கணக்கு தலைப்பில் செலான் எண். 3 நாள் : 28.06.2019–ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

2. இப்பேரூராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்ட சாலை ஸ்தலங்களில் யாதொரு வகையில் ஆக்ரமணங்கள் ஏற்படாதவாறு, பத்திரபதிவில் கண்டபடி இருத்தல் வேண்டும். சாலைகள் ஒப்படைப்பு பத்திர பதிவு எண். 15/2019 நாள் 04.01.2019 என்ற கொடைவழி பத்திரம் மூலம் பேரூராட்சிக்கு சாலை மற்றும் பூங்கா தானமாக பெறப்பட்டுள்ளது.

3. 68 மனைகள் விற்பனையின்போது மனையின் எண்கள் குறிப்பிட்டு அதன் பரப்பளவுகளுக்கே கிரய சாசனமும், பத்திர பதிவும் செய்யப்பட வேண்டும்.

4. அண்டை நிலங்களுக்கு அணுகு வழி சாலை கண்டிப்பாக அமையும் வகையில் மனைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

5. **இந்த மனைப்பிரிவு தங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் தவறு என்று பின்னர் தெரிய வந்தால், எவ்வித முன் அறிவிப்பும் இன்றி இவ்வுத்திரவு ரத்து செய்யப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.**

6. நில உரிமை குறித்து வழுங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் மனைப்பிரிவிற்கு குத்தாலம் பேரூராட்சி நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும்.

7. மனைப்பிரிவுகள் ஊடே செல்லும் நீர்நிலைகளை எத்தருணத்திலும் ஆகிரமிப்புகள் செய்யக் கூடாது. மேலும், அதில் கழிவு நீரினை விடாவண்ணம் பாதுகாத்திட வேண்டும்.

8. தெருவிளக்கு அமைப்பானது தங்களது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அதில் கூடுதல் செலவினம் ஏற்படும் பட்சத்தில் தாங்கள் அதை செலுத்த வேண்டும்.

9. பார்வை (5)ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் அனுமதி உத்தரவில் பிறப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுபட்டு அதன்படி நடக்க வேண்டும். எவ்விதத்திலும் மீறிச் செயல்படக்கூடாது.

10. ம.வ./ந.ஊ.து.இ(த.ம) எண். 01/2019ல் குறிப்பிட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு மனைகளுக்கு எண்ணிட்டும், கடை பகுதிக்கு கடைபகுதியென குறிப்பிட்டு பத்திர பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

11. பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தை கம்பி அடைப்பு செய்து போர்டு வைக்க வேண்டும்.

12. மேற்கண்ட நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் ஏற்படும் இழப்புகள் செயல் அலுவலரையோ அல்லது இப்பேரூராட்சியையோ எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

13. நகர் ஊரமைப்பு துணை இயக்குனரால் அளிக்கப்பட்டுள்ள 01/2019 நிபந்தனை அனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

செயல் அலுவலர் (மு.கூ.பொ.)
குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

இணைப்பு : அங்கீகார வரைபடம் – 1 மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அனுமதி எண். 01/2019ன் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுதல் : திரு. ஜி. வைத்தியலிங்கம், திரு. பி. பிரஹதீஷ் நடராஜ் (2), 1/242. காந்திஜி தெரு, சீனிவாசபுரம், மயிலாடுதுறை.

நகல் : 1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், எண். 33, 4–வது தெரு, ராஜப்பா நகர், மருத்துவ கல்லூரி சாலை, தஞ்சாவூர் – 613 007 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

2) சார்பதிவாளர், குத்தாலம் அங்கீகார மனைப்பிரிவு வரைபடம் ஒன்று, இத்துடன் உள்ளதின்படி அங்கீகார மனைகள் விற்பனைக்கு பத்திரம் பதிவு செய்ய தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

# நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: **1241/2017** தம2 நாள்: **15.02.2019**

பொருள்:- மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - தஞ்சாவூர் மாவட்டம் - குத்தாலம் வட்டம் மற்றும் பேரூராட்சி - இனாம்குத்தாலம் கிராமம் – நி.அ.எண்கள்: 476/1C1; 482/2A-ல் அமையும் 154172.77ச.அடி பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. செயல் அலுவலர், குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி, அவர்களின் கடிதம் ந.க.எண்: 257/2017/அ3 நாள்: 04.01.2019
2. மனுதாரர் திரு.G.வைத்திலிங்கம் மற்றும் திரு.B.பிரஹதீஷ் நடராஜ், அவர்களின் விண்ணப்பம் நாள்: 12.02.2019
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 7879/2012/எல்ஏ2 நாள்: 19.04.2012
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13686/2017/எல்ஏ1 நாள்: 08.09.2017
5. அரசாணை எண்: 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017

---

**உத்தரவு:-**

பார்வை 1-ல் கண்ட செயல் அலுவலர், குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு உத்தேசம் தொடர்பான இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி இத்துறையின் தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் இக்குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: **01/2019** என எண்ணிடப்பட்டு மூன்று வரைபட நகல்கள் இத்துடன் உரிய நடவடிக்கைக்காக செயல் அலுவலர், குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(இ) மற்றும் 19(உ)குறித்து உறுதி செய்துகொண்ட பின்னரே உள்ளாட்சி மன்றத்தின் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

மேலும், பார்வை (5)ல் கண்ட அரசாணை விதி எண்:9-ல் நகர் ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம், (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து அதனை வசூலித்து, அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்படி தொகையினை பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

உள்ளாட்சி மன்ற ஒப்புதலுக்கு பின்னரே மனைப்பிரிவு அமுலுக்கு வரும். எனவே, மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக செயல் அலுவலர், குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களை தொடர்பு கொண்டு இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

15/2/19
15.2.19

**இணைப்பு:-**

மூன்று வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள்.

பெறுனர்:-

செயல் அலுவலர்,
குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சி,
குத்தாலம் வட்டம்,
நாகப்பட்டிணம் மாவட்டம்.

நகல்:

திரு.G.வைத்திலிங்கம்
திரு.B.பிரஹதீஷ் நடராஜ்,
நெ.4/39, ஜெயராஜ் நகர்,
மங்கநல்லூர்,
குத்தாலம் வட்டம்,
நாகப்பட்டிணம் மாவட்டம்.

அலுவலக முகவரி:

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்
அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம்
எண்.33,ராஜப்பா நகர் 4வது தெரு,
மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:-ddtjrregion@gmail.com



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## empowering your real estate decisions with smart tools

### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate